## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.123** **நாள்: 27.02.2026**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, இராயபுரம் மண்டலத்தில் ரூபாய் 3.81 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, இராயபுரம் மண்டலத்தில் ரூபாய் 3.81 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, இராயபுரம் மண்டலம், வார்டு-54க்குட்பட்ட பெத்து தெருவில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூபாய் 1.10 கோடி மதிப்பீட்டில் சிவஞானம் பூங்கா மேம்படுத்தும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, இராயபுரம் மண்டலம், வார்டு-55க்குட்பட்ட, சண்முகம் தெருவில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 1.10 கோடி மதிப்பீட்டில் புதிய மாநகராட்சி பகுதி அலுவலக் கட்டடம் கட்டும் பணி மற்றும் வார்டு-57க்குட்பட்ட, பிரகாசம் சாலையில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 1.61 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீராமுலு பூங்கா மேம்படுத்தும் பணி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திரு.தாஹா நவீன், மண்டல அலுவலர் திரு. விஜய்பாபு, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரு.எஸ்.ராஜசேகர், திரு.எஸ்.முரளி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**